பட்டினமும் சூழலும் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 14 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2020 யூலை 17 மற்றும் 2020 ஆகஸ்ட 19 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.31 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள 21 வட்டாரங்களில் 22,494 ஆதனங்களின் மீதான நிலுவை வீத வரி ரூபா 12,837,893 தொகையாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளபோதிலும், ஏடுகளில் ரூபா 16,444,270 தொகையாக காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் கணக்குகளில் ரூபா 3,606,377 தொகை குறைத்துக்காட்டப்பட்டு ள்ளது. | பதிவுகளை உரிய முறையில் பதிவதை உறுதிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டின் இறுதிவரை பிரதேச சபையின் சதுர எல்லைக்குள் உள்ள 21 வட்டாரங்களில் 22494 ஆதனங்களின் மீதான நிலுவை வீதவரி இறுதி கணக்குகளில் ரூபா 3,606,337 தொகை குறைத்துக்கு காட்டப்பட்டுள்ளது. தற்போது குறித்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் அங்கீகாரத்தை பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) மீளாய்வாண்டில் மே மாதம் தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரையான காலப்பகுதிக்கான ரூபா 6,411,650 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் கணக்குகளில் காட்டப்பட்டி ருக்கவில்லை. | பெறவேண்டிய தொகையை கணக்குகளில் காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தங்களால் குறிப்பிடப்பட்ட மே தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரையான ரூபா 6,411,650 தொகையான நீதிமன்ற தண்டப்பணமானது எமது சபைக்குரிய வருமானப் பரிசோதகரினால் கணிப்பிடப்பட்டதாகும். இதுவரைகாலமும் இறுதிக் கணக்குகளின் சட்டபூர்வமான கடிதம் முலமாக கிடைக்கப் பெற்ற வருமானம் மாத்திரமே உள்ளடக்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| (இ) 2018 ஆண்டு காலப்பகுதிக்கான முத்திரை தீர்வை ரூபா 14,939,320 தொகை மற்றும் மீளாய்வாண்டு இறுதிவரைக்குமான நிலுவை முத்திரைத் தீர்வைகள் கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | பெற வேண்டிய மிகுதிகளை கணக்குகளில் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இத் தொகையானது கணக்கீட்டு காலத்தில் உறுதிப்படுத்தப்பட்டு கிடைக்கப் பெறாமையினால் கணக்குளில் பெற்ற வருமானத்தினை மாத்திரமே உள்ளடக்கப்பட்டது. |
| (ஈ) தனியார் காணிகள் உப பிரிவிடலின் போது பிரதேச சபையின பொதுப்பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட 10% சதவீதமான 03A 01R 14.29P விஷ்தீரனமுள்ள காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை | உரிய சொத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் கணக்குகளில் இதனை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ)2017 மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது பொருள் இருப்புக் கணிப்பீட்டு சபையினால் ஏல விற்பனைக்கு சிபார்சு செய்யப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான 376 பொருட்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 130 பொருட்கள் மீளாய்வாண்டு காலத்தில் ஏல விற்பனை செய்யப்பட்டு ரூபா 145,836 தொகை பெறப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இவ் சொத்துக்களின் கொள்விலைப் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றில் கழித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. | அகற்றிய பொருட்களை பெறுமதி கழிக்கப்பட்டு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் ஏலவிற்பனை செய்யப்படும் பொருட்களின் கொள்விலை பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்குகளில் கழித்து காட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ)சபையின் பாதுகாப்புச் சேவை, மின்சார இணைப்பு, வாகன உதிரிப்பாகங்கள் கொள்வனவு மற்றும் அத்தோடு சேர்ந்த செலவுகள் ரூபா 8,809,722 தொகையும் நிதிக்கூற்றுக்களில் காணிகட்டிடங்கள் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | காணி, கட்டடங்கள் தொடர்பான செலவுகள் மட்டும் காணி கட்டிடங்கள் கணக்கின் கீழ் வெளிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எமது சபையின் கணக்கறிக்கைகள் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்திற்கமைவான Stranded Format இல் இறுதிக் கணக்கறிக்கை தயாரிக்கப்படுகின்றது. இதனால் சபையின் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்கான செலவு செய்யப்பட்ட ரூபா.8,809,722 தொகையையும் நிதிக்கூற்றில் காணி கட்டடங்களின் பெறுமதி மாத்திரமே உள்ளடக்கப்படுகின்றது. |

1.3.2 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள சந்தைக்குத்தகை வாடகை ரூபா 1,188,570 தொகை தொடர்பில் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும், நிலுவைகளை அறவிட அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் கட்டாயம் அறவிடப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நீண்டகாலமாக காணப்படும் குத்தகை வாடகையானது 2015 ஆண்டுக்கு முற்பட்ட தொகையாக ரூபா.455,232 காணப்படுகின்றது. இவ் நிலுவைக்கான ஆதாரங்கள் ஏதும் பதிவுகளில் காணப்படவில்லை என்பதுடன் 2016, 2017ம் ஆண்டுகளில் குத்தகைக்காக வழங்கப்பட்டகுத்தகைதாரர் களிடமிருந்து பெறப்பட்ட பணத்தொகையான ரூபா.165,336 வருமானத்திற்குள் காட்டப்படாது வைப்பிலேயே காட்டப்படுகிறது. |

1.3.3 ஆவணச்சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 149,885,647 தொகையான 3 கணக்கீட்டு உருப்படிகள் தொடர்பாக காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் 3 கணக்கீட்டு உருப்படிகள் தொடர்பாக ஆதாரங்கள் முன்வைக்கப்படவேண்டும் | நிலையான சொத்து பதிவேட்டில் எமது சபைக்கு சொந்தமான உறுதிக் காணி கட்டிடம் மட்டுமே பதியப்பட்டுள்ளது. ஏனைய காணிமற்றும் கட்டிடங்களை பிரதேச சபைக்கு கையளித்தல் தொடர்பாக காணி உரிமம் பாரதீனப்படுத்தலுக்கான ஆவணங்கள் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டடிருந்த போதிலும் இதுவரை காணி மற்றும் கட்டிடங்களின் உரிமம் கிடைக்கப் பெறவில்லை. |

1.4 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க | 1990 ஆம் ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் | பொறுப்பானவர் களிடம் அங்கீகாரத்தைப் | எமது சபையினால் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட முற்பணம் ரூபா. 2,356,250 |

| | | | |
|---|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின்182 பிரிவு | பலதரப்பட்ட பிரிவினர்களுக்கு முற்பணங்கள் ரூபா 2,356,250 தொகை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமின்றி கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது. | பெற்று பதிவளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொகை கணக்குகளில் இடாது பதிவிடப்பட்டது. பொறுப்பான அமைச்சின் அங்கீகாரத்திற்கு அமைய அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

-----------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,222,592 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 47,913,097 தொகையாக ஆக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

--------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2019.12.31 இல் நிலுவை | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2018.12.31 இல் நிலுவை |
| | ரூபா “000” | ரூபா “000” | ரூபா “000” | ரூபா “000” | -ரூபா “000” | ரூபா “000” | ரூபா “000” | ரூபா “000” |
| வீதவரிகள் | 26,225 | 39,130 | 26,292 | 12,838 | 26,420 | 24,323 | 23,502 | 821 |
| வாடகை | 3,238 | | 2,512 | | 2,786 | 2,362 | 2,263 | 99 |
| அனுமதி பத்திர கட்டணம் | 6,318 | | 1,286 | | 4,523 | 2,510 | 2,415 | 95 |
| மொத்தம் | 35,781 | 39,130 | 30,090 | 12,838 | 33,729 | 29,195 | 28,180 | 1,015 |

#### 2.2.2 சோலைவரி

-------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆதனவரி மீள்மதிப்பீடு செய்யப்பட்டு வரிகள் அறவிடப்படாமல் ஆதனவரியானது 2012 ஆம் ஆண்டில் விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடப்பட்ட வருடாந்த மதிப்பீட்டின் | மதிப்பீட்டுத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையினால் அறவிடப்படும் ஆதனவரியானது 2012ம் ஆண்டு வரிமதீப்பீட்டு திணைக்களத்தினால் மதீப்பீட்டு செய்யப்பட்டுள்ளதுடன் 2019 ம் ஆண்டு மீள்மதீப்பீடு செய்து |

| | |
|---|---|
| அடிப்படையில் அறவிடப்படுகின்றது. மற்றும் ஆண்டுப் பெறுமானத்தில் அறவிடப்படும் வீதமானது சகல விதமான ஆதனங்களுக்கும் 6% சதவீதம் மாத்திரம் அறவிடப்படகின்றது. | தரகோரி வரி மதீப்பீட்டு திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

2.2.3 தொலைதொடர்பு கோபுரம் நிறுவுவதற்கான நிலவாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மூன்று தனியார் நிறுவனங்களுக்கு தொலைதொடர்பு கோபுரங்களை நிறுவுவதற்கான காணிகளை வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட போதிலும், வாடகைப் பெறுமதி விலைமதிப்பீட்டு செய்யப்படாது வழங்கப்பட்டுள்ளது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பெறுமதியைப் பெற்று ஒப்பந்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச சபைக்கு சொந்தமான இவ் ஆதனம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள கடைத் தொகுதிகளுக்கும் தொலைத்தொடர்பு கோபுரத்திற்கு ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ள போதிலும் உரிய வாடகை தொடர்பாக முன்னைய உத்தியோகத்தர்களால் விலை மதிப்பீடு திணைக்களத்தின் வாடகை மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்படவில்லை. தொலைத் தொடர்பு நிறுவனத்துடன் ஒப்பந்தம் புதுப்பிக்கும் போது விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் அறிக்கையினை பெற்று வாடகை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) தொலைதொடர்பு நிறுவனத்தினால் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட வாடகை தொகை செலுத்தப்படாது ரூபா 18,152 தொகை குறைத்து செலுத்தப்பட்டுள்ளது. | இறைவரித் திணைக்களத்தின் கடிதத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒப்பந்தத்தின்படி 01.09.2015 ல் இருந்து 31.08.2019 திகதியிலான காலப்பகுதியில் மாத வாடகையாக ரூபா 14641.00 என ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள போதும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் SEC/2018/05 இலக்க 29.03.2018 திகதிய சுற்றுநிரூபத்தின் Payments to which section 84 (1) (a) (i) அமைய 10% வரிகளிப்பு வழங்கப்பட்டதற்கு அமைவாக அந்நிறுவனதால் 13.177 ரூபா செலுத்தப்பட்டுள்ளது. |

2.2.4 காணிகள் விற்பனை மீதான வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான காணிகள் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரியாக முறையே ரூபா 3,095,970 மற்றும் ரூபா 2,899,430 தொகைகள் அறவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1987 / 15ம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 154ம் பிரிவுக்கமைவாக எமது சபை அதிகார எல்லைக்குள் ஏல விற்பனை, வேறு வகையில் ஏல விற்பனை, அல்லது தரகர் அவரது சேவையாளர் அல்லது முகவர் மூலம் காணிகள் விற்கப்படுமிடத்து விற்பனையின் மூலம் கிடைக்கப்பெறுகின்ற ஒரு வீத வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

2.2.5 உல்லாச விடுதிகளின் வருமானம் மீதான தீர்வை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையில் பதிவு செய்யப்படட ஒரு விடுதியகம், உணவுச்சாலை அல்லது உறையகம் என்பவற்றிடமிருந்து பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவுக்கமைய, இடை நிலை நிறுவப்பட்ட கட்டணங்கள் ஒரு வீதத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை ஏற்படுத்தி வரியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1987/15ம் இலக்க 122 க்கு அமைவாக துணைவிதிகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படாத காரணத்தினால் இவ்வரி அறவிடப்பட முடியாதுள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள்மற்றும் பொது வழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் சபையில் ஆயள்வேத மருந்தகர்கள் இரண்டு (02) பேர் பற்றாக்குறையாக காணப்பட்ட போதிலும் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இதற்கான அனுமதி இன்றுவரை கிடைக்கப்பெறவில்லை. |

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

3.3.1 தெரு விளக்குகள் பொருத்தப்பட்டமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டில் வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தப்படுவதற்கென LED Street Lamp (150W) தரத்திலான 85 மின்குமிழ்கள் ரூபா 1,105,500 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | தரமான மின் குமிழ்களை அடையாளம் கண்டு அதற்கு ஏற்ற மாதிரி கொள்வனவு செய்ய நடவடிக்கை | மேலும் 2019ம் ஆண்டு பெறப்பட்ட விலைகூறுகள் மற்றும் கொள்வனவு தீர்மானங்கள் (14/01/2019 மற்றும் 05/08/2020) அமைய பழுதுபார்த்து தருதல் என்ற உத்தரவாத முறையில் 150 Copra LED அலகு ஒன்றுக்கான ஆகக் குறைந்த விலை ரூபா.12,880 ஆகவும் ரூபா.11,150 ஆகவும் |

| | | |
|---|---|---|
| இக்காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட மின்குமிழ்களின் பெறுமதி ரூபா 2,000 தொடக்கம் ரூபா 10,000 வரையிலான வீச்சில் கூடிக்குறைந்து வேறுபாடு காணப்படுகின்றமை அவதானிக்கப் பட்டுள்ளது. | எடுக்கப்பட வேண்டும். | காணப்பட்டது. மேலும் இது 2020ம் ஆண்டு கொள்வனவில் அலகு ஒன்றுக்கான 150 Copra LED ஆகக் குறைந்த விலை ரூபா.10,400 ஆகவும் காணப்படுகின்றது |

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.4.1. நிலையான சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 01A 07R 7.29P விஸ்தீரனமுள்ள காணிகள் சபையினால் எவிவிதமான பொதுப்பயன்பாட்டிற்காக பயன்படத்தப்படாது 03 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளமை அவதானிக்கப்பட்டள்ளது. | காணியை உரிய அபிவிருத்தி வேலைக்கு பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எமது சபைக்கு கிடைக்கும் நிதியினை கொண்டு இக்காணிகளில் திட்டங்களை மேற்கொள்வதற்கு நிதி போதாமல் உள்ளது.இருந்த போதிலும் தற்பொழுது உறுதி இல-3785 காணியினை எமது சபையின் வாகனங்கள் திருத்தும் வேலைத்தளம் மற்றும் திண்மக்கழிவகற்றும் வாகனங்கள் தரிப்பிடம் அமைப்பதற்கும் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பங்களிப்புடன் முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் இக்காணிகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

3.4.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வானது 2018 ஆண்டை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ள வேண்டும். | சென்ற வருடத்துடன் ஒப்பு நோக்கி வருடாந்த பொருள் இருப்பெடுப் பதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019ம் ஆண்டுக்கான வருடாந்த பொருள் இருப்பெடுப்பில் இருப்புப் பதிவேட்டினை பார்வையிட்டே மேற்கொள்ளப்பட்டுள்ளது உன்பதை அறியத்தருகின்றேன். இனிவரும் காலங்களில் சென்ற வருட இருப்பெடுப்புப் பதிவினையும் பார்வையிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வுக் குழுவினால் 2018 மற்றும் 2019 அம் ஆண்டுகளில் வருடாந்த பொருள் இருப்பு மெய்மையாய்வு செய்யப்பட்ட போது சபையினால் பொருட்களின் ஏல விற்பனை தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டதுடன் ஏனைய விடங்களில் கவனத்தில் கொண்டிருக்கவில்லை. | தவறுகளைத் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை | உள்ளகக் கணக்காய்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எமது சபையின் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தராக திருமதி.S.M.திராணிமுகாமைத்துவ உதவியாளர் நியமனம் செய்யப்பட்டு இருந்த போதிலும் ஆளணி பற்றாக்குறை காரணமாக உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலக ஆய்வு உத்தியோகத்தரால் உள்ளகக் காணக்காய்வு மேற் கொள்ளப்படுகின்றது. |